# லாரன்ஸ் வோங் 4G தலைவருக்கான சிறந்த தேர்வு என்று 10இல் 6 சிங்கப்பூரர்கள் கருதுகின்றனர் : IPS ஆய்வு

***Seithi Mediacorp,*** 14 July 2022

சிங்கப்பூர்க் குடியிருப்பாளர்களில் 10இல் 6 பேர் சிங்கப்பூர் சாத்தியமுள்ள ஆகச்சிறந்த 4ஆம் தலைமுறைத் தலைவரைப் பெற்றிருப்பதாக நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய ஆய்வில் அது தெரியவந்தது.

கிருமிப்பரவலுக்குப் பிந்திய பொருளியல் மீட்பை வழிநடத்திச் செல்வதற்குத் துணைப்பிரதமர் லாரன்ஸ் வோங் (Lawrence Wong) பொருத்தமானவர் என்று அவர்கள் கருதுகின்றனர்.

கல்வித் தகுதி அதிகரிக்க அதிகரிக்க, அந்த நம்பிக்கை வலுப்படுவது கருத்தாய்வில் தெரியவந்தது.

ஆய்வில் பங்கேற்றவர்களில் கணிசமானோர் 4ஆம் தலைமுறைத் தலைவர்கள் மீது பொதுவாக நல்ல நம்பிக்கை கொண்டுள்ளதாகக் கூறினர்.

இருப்பினும் சிங்கப்பூரர்களது வாழ்க்கையின் குறிப்பிட்ட சில துறைகளில் அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்றும் அவர்கள் விருப்பம் தெரிவித்தனர்.

குறிப்பாகப் பொருள், சேவை வரி கட்டங்கட்டமாக உயரவிருப்பதை அவர்கள் சுட்டினர்.